8301

Register Number | | | | | |

# தமிழ் - முதல் தாள்

# Language – Part A – TAMIL – Paper I

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்பு : i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினவாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் IV - க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் எட்டனுக்கு மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 8 × 2 = 16

1. திரு.வி.க. அவர்கள் படைத்த நூல்களுள் நான்கினைக் கூறுக.
2. எவ்விரண்டில் எல்லா அறங்களும் உள்ளன ?
3. எந்நிலத்தில் விளையுள் நன்று ?
4. பொறுத்தல் எப்போது நிகழ வேண்டும் ?
5. உண்மைக் கிறித்தவர்க்குரிய இலக்கணம் யாது ?
6. பாடாண் திணை - விளக்குக.
7. குறுந்தொகை வாயிலாக நாம் அறிய வருவன யாவை ?
8. பாரத பூமி எத்தகைய பூமி ?
9. ஆசிரியர் பீர்க்கம் பூவை எதற்கு உவமிக்கிறார் ?
10. திருப்பாமாலை - பெயர்க்காரணம் கூறுக.

[ Turn over

II. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 3 × 5 = 15

11. நாமக்கல் கவிஞர் தமிழை எவ்வாறு வாழ்த்துகிறார் ?

12. சினத்தின் தீங்கினை விளக்குக.

13. செல்வத்தை அழிக்கும் படைகள் யாவை ?

14. தாயுள்ளத்தின் இயல்புகள் யாவை ?

15. கழுமல வளநகர்ப் பெருந்தகையை ஞானசம்பந்தர் எங்ஙனம் போற்றுகிறார் ?

III. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக : 1 × 7 = 7

16. ஊக்கமே சிறந்ததென்பதனையும், அதனை உடையாரது உயர்ச்சியையும் விளக்கி எழுதுக.

17. அசோகவனத்தில் அனுமன் சீதையைக் கண்டு துணிந்து மகிழ்ந்த வரலாற்றைத் தொகுத்து எழுதுக.

18. கடல் பற்றிக் கவிஞர் வள்ளத்தோள் கூறுவன யாவை ?

19. 'விண்மீன் கூட்டம்' என்னும் தலைப்பில் வாணிதாசன் கூறியுள்ளனவற்றைத் தொகுத்து எழுதுக.

IV. பின்வருவனவற்றை அடிபிறழாமல் எழுதுக : 2 + 2 + 3 + 3

20. 'தோன்றின் .......' எனத் தொடங்கும் குறளையும், 'உயர்வு' என முடியும் குறளையும் எழுதுக.

21. 'வீடின ........' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலையும் 'தன்னரிய .......' எனத் தொடங்கும் இரட்சணிய யாத்திரிகப் பாடலையும் எழுதுக.

V. கீழ்க்காணும் **அனைத்து** வினாக்களுக்கும் விடை எழுதுக : 10 × 1 = 10

22. தெப்பம் என்னும் சொல்லின் பொருள் .................. . ( புனை / புணை )

23. 'ஈத லிசைபட வாழ்தல்' எனக் கூறுவது

அ) திரிகடுகம்

ஆ) திருக்குறள்

இ) திருவாசகம்.

24. 'உரைப்பா ருரைப்பவை' - இத்தொடரில் ............. அமைந்துள்ளது.

அ) மோனை

ஆ) எதுகை

இ) இயைபு.

25. 'மாசுண்ட மணியனாள்' - இத்தொடரில் சுட்டப் பெறுபவள்

அ) சீதை

ஆ) கண்ணகி

இ) மணிமேகலை.

26. புரட்சிக் கவிஞர்

அ) பாரதியார்

ஆ) நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

இ) பாரதிதாசன்.

27. 'சிலப்பதிகாரம்' என்னும் தொடரைப் பிரிக்கும் முறை

அ) சிலப்பு + அதிகாரம்

ஆ) சிலம்பு + அதிகாரம்

இ) சிலப்பதி + காரம்.

28. குறுந்தொகையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை

அ) 400

ஆ) 402

இ) 300.

29. வசை என்பதன் பொருள்

அ) பழி

ஆ) பாவம்

இ) இழிவு.

30. விளக்கால் பெறுவது .................... ( ஒளி / ஒலி )

31. பூக்களில் இருப்பது ம......................ம். ( ன / ண )

VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : $5 \times 2 = 10$

32. தாய்மொழிக் கல்வி பற்றிய திரு.வி.க.வின் கருத்து யாது ?

33. திரு.வி.க. 'கொழுகொம்பு' என்று எதனைக் குறிப்பிடுகிறார் ?

34. இமயம் என்பது நெ.து.சு.விற்கு எவற்றை நினைவுபடுத்துகிறது ?

35. குடும்பத்தில் பிறக்கும் உயர்ந்த குணங்கள் யாவை ?

36. குழந்தை வளர்ப்புத் துறையில் அறிய வேண்டுவன யாவை ?

37. கள்ளுக்கடை மறியலில் முதல்முதலாக வந்த பெண்மணிகள் யாவர் ?

38. செல்வர்கள் ஔவையாரிடம் வேண்டியது என்ன ?

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : $3 \times 5 = 15$

39. எத்தகைய எண்ணம் நாட்டைவிட்டு அகலல் வேண்டுமெனத் திரு.வி.க. கூறுகிறார் ?

40. இல்வாழ்க்கை எப்படி வளர வேண்டும் என மு.வ. வாழ்த்துகிறார் ?

41. பெரியாரோடு பிறந்த இரண்டு நல்லுணர்வுகளை விளக்குக.

42. மனையியல் கல்வியின் இன்றியமையாமையை எழுதுக.

43. ஔவையார், தம் வாய் யார் யாரைப் பாடியதாகக் கூறிப் பெருமைப்படுகிறார் ?

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் ( பதினைந்து வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 1 × 7 = 7

44. அனைவரும் கல்வி பெற வேண்டும் என்பதனைத் தமிழ்த்தென்றல் திரு.வி.க. எவ்வாறு விளக்குகிறார் ?

45. வ.உ. சி. அவர்களின் செய்ந்நன்றி மறவாப் பண்பினை விளக்கி எழுதுக.

46. 'ஔவையாரே பாஸ்கலுக்கு முன்னோடி' என்பதை விளக்குக.

47. பெண்களுக்கு மனையியல் கல்வி மிக வேண்டற்பாலது என்பதனை விளக்குக.

IX. கீழ்க்காணும் **அனைத்து** வினாக்களுக்கும் விடை எழுதுக : 10 × 1 = 10

48. ஒருதுறைக் கோவை என்பது

அ) அகத்துறைச் சிற்றிலக்கியம்

ஆ) சிலேடை

இ) அந்தாதி.

49. கோடிட்ட இடத்தை நிரப்புக :

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் .................. பொறுத்தே நிற்கும்.

50. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை பன்மைப் பிழைகளை நீக்குக :

மனையியல், கல்வித்துறையில் ஒரு பாடமாகச் சமீபத்தில்தான் இடம் பெற்றன.

51. கீழ்க்காணும் வாக்கியம் எவ்வகை வாக்கியம் ?

சிதம்பரனார் செய்ந்நன்றி மறவாச் செம்மல்.

52. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழைகளைத் திருத்துக :

ஈரோட்டு சிங்கம் ஈ.வெ.ரா.வின் தனிசிறப்புகள் சில

53. கீழ்க்காணும் உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றுக :

அ) தேன்மொழி ஆ) மலரடி

54. வேற்றுமை உருபைச் சேர்த்து எழுதுக :

உயர்ந்த புலவர்களின் காவியங்கள் ................. படி. ( கு, ஐ, ஆல், இன் )

55. கீழ்க்காணும் சொற்களுள் இருபொருள் தரும் ஏதேனும் ஒரு சொல்லை எழுதி, அச்சொல் தரும் இருபொருளையும் எழுதுக.

அ) நாண் ஆ) மறை

இ) பிடி ஈ) வேழம்.

56. கீழ்க்காணும் வாக்கியம் விடையாக அமையுமாறு வினாத்தொடர் அமைத்திடுக :

அனந்தன் என்பது ஆதிசேடனது பெயர்.

57. கீழ்க்கண்ட தொகைச் சொற்களுள் ஏதேனும் ஒன்றை விரித்து எழுதுக :

அ) இருதிணை ஆ) முக்காலம்.